ஜுபிடர் பிக்சர்ஸ் &
சேலம் ஷண்முகா பிலிம்ஸ்
தயாரித்த
கண்ணகி
சௌத் இந்தியா பிக்சர்ஸ் ரிலீஸ்
SIP
RELEASE

கதை, வசனம்
இளங்கோவன்

பாட்டு
உடுமலை - நாராயண கவி

சங்கீதம்
S. V. வெங்கட்ராமன்

நடனம்
V. B. ராமையா பிள்ளை &
போலாநாத்

ஆர்செஸ்ட்ரா
N. S. பாலகிருஷ்ணன்
&
ராமனுதன் பார்ட்டி

பின்னணி சங்கீதம்
K. V. நாயுடு
&
பார்ட்டி

புரொடக்ஷன்
S. K. மொஹிதீன்

டைரக்ஷன்
M. சோமசுந்தரம்
R. S. மணி

போட்டோகிராபி
மார்க்கஸ் பார்ட்லே

ரிக்கார்டிங்
டின்ஷா தெஹ்ராணி
&
T. T. அரசு

ஆர்ட் டைரக்ஷன்
F. நாகூர்
&
G. ராமராஜு

Sri. M. S. M. M. மெய்யப்ப செட்டியார் அவர்கள்
ஆதரவில்

M. சோமசுந்தரம், K. கந்தசாமி
தயாரிப்பு

ஜுபிடர் ஸ்டுடியோ

நடிகர்கள்

P. U. சின்னப்பா	கோவலன்
D. பாலசுப்ரமணியம்	பாண்டியன்
M. R. ஸ்வாமிநாதன்	வஞ்சிப்பத்தன்
T. V. நமசிவாயம்	பாலகோவலன்
K. N. குளத்துமணி	மாச்சேட்டான்
K. P. ஜயராமன்	மாணாக்கன்
S. V. சகஸ்ரநாமன்	பரமசிவன்
K. N. ராமலிங்கம்	நல்மந்திரி
V. ரமணி	துர்மந்திரி
T. R. ராமச்சந்திரன்	சாஸ்திரி
N. S. கிருஷ்ணன்	இஞ்சிப்பத்தன்
P. G. குப்புசாமி	கருடாழ்வான்
T. N. ராமசாமி	நடராஜன்
E. கிருஷ்ணமூர்த்தி	தணிகாசலம்
திருவேங்கடம்	மீனாக்ஷி

நடிகைகள்

P. கண்ணாம்பா	கண்ணகி
M. S. சரோஜா	மாதவி
குமாரி ரத்தினம்	பால கண்ணகி
U. R. ஜீவரத்தினம்	கௌந்தி அடிகள்
M. M. ராதாபாய்	பாண்டிய மகிஷி
S. யோகாம்பாள்	மாதரி
T. A. ஜயலக்ஷிமி K. R. ஜயலக்ஷிமி	நடனமாதர்
T. V. A. பூரணி	வசந்தமாலை
T. A. மதுரம்	வஞ்சிப்பத்தன் மகள்
K. T. சக்குபாய்	இஞ்சிப்பத்தன் மனைவி

கண்ணகி

கதைச் சுருக்கம்

முகவுரை:

சுமார் இருபது நூற்றாண்டுகளுக்கு முன் இளங்கோ அடிகள் இயற்றிய சிலப்பதிகாரம் தமிழில் ஐந்து மகா காவியங்களில் ஒன்றாகப் போற்றப்பட்டு வருகிறது. ஹிந்து தர்மத்தின் மகா சக்தியான பத்தினிப் பெண்டிரின் பெருமையை விளக்கும் கதை சிலப்பதிகாரம். கண்ணகி தமிழ்ப்படக் கதை சிலப்பதிகாரத்தைத் தழுவி அமைக்கப்பட்டிருக்கிறது.

சிவசக்தி தர்க்கம் — சிவன் சாபம்:

கைலாசத்தில் சிவன் ஆனந்த தாண்டவமாடுகிறார். பார்வதி, சிவம் பெரிதா சக்தி பெரிதா என்ற கேள்வியை எழுப்புகிறாள். சிவன் இரண்டும் பெரிது என்கிறார். சக்தி தான் பெரிதென்று பார்வதி வாதாடுகிறாள். அவளை மதுரையில் பூஜையற்ற துர்க்கை கோவிலில் உள்ள விக்ரகத்தில் வசிக்க சிவன் சாபமிடுகிறார்.

மதுரையில் எண்ணை விற்பதற்காகச் சென்றுகொண்டிருந்த ஒரு ஏழை வாணியன், அன்று எண்ணை அவ்வளவும் விற்றுவிட்டால நெய்விளக்கு ஏற்றுவதாக அந்த துர்க்கை கோவிலில் பிரார்த்தித்துவிட்டுப் போகிறான். எண்ணை அவ்வளவும் விற்றுவிட்டதால் வேண்டிக்கொண்டபடி நெய் விளக்கும் ஏற்றுகிறான்.

துர்க்கை கோவிலில் யாரோ வாணியன் விளக்கேற்றிய செய்தி அரசனுக்கு எட்டுகிறது. தங்கள் மூதாதையர் சட்டத்தைமீறி துர்க்கைக்கு விளக்குவைத்தவனை உடனே சிரச்சேதம் செய்யும்படி அரசன் உத்திரவிடுகிறான்.

துர்க்கையின் சபதம்:

தனக்கு விளக்கேற்றியவனை சிரச்சேதம் செய்த பாண்டியனைப் பழிவாங்க துர்க்கை சபதம் செய்கிறாள். வாணியனின்

வெட்டுண்ட தலையை ஒரு பழமாக்கி ஜடாசுரன் என்ற பூதத்தின் மூலம் மாச்சோட்டான் செட்டி கையில் அதைச் சேர்ப்பிக்கிறாள். அதை, அவன் மனைவியிடம் கொடுத்தால் அவர்களுககு ஒரு மகன் பிறப்பான் என்று ஜடாசுரன் சொல்லிக் கொடுக்கிறான். துர்கை ஒரு ஜோதி வடிவமாகப் பாண்டிய மகிஷியின் கருவில் நுழைகிறாள்.

கோவலன்—கண்ணகி ஜனனம் :

காவிரிப்பூம் பட்டினத்தில் மாச்சோட்டானுக்கு ஒரு மகன் பிறக்கிறான். பாண்டிய மகிஷி ஒரு பெண் மகவைப் பெறுகிறாள். சமஸ்தான ஜோஷியர் பெண்ணின் ஜாதகத்தைப் பார்த்து, அதனால் பாண்டிய வம்சமே அழிந்துவிடுமென்று அறிவிக்கிறார். அரசன் பயந்து குழந்தையை ஒரு பெட்டியில் வைத்து வைகையில் விட்டுவிடச் செய்கிறான். படகில் தங்கள் நாட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்த மாச்சோட்டானும் மாணக்கனும் மிதந்துவரும் பெட்டியைக் கண்டு எடுக்கிறார்கள். பெட்டிக்குள்ளிருந்த குழந்தையை மாணக்கன் எடுத்துக்கொண்டு அதற்குக கண்ணகி என்று பெயரிடுகிறான். இருவரும் தங்கள் குழந்தைகளை கணவனும் மனைவியுமாகக் தீர்மானிக்கிறார்கள்.

கண்ணகியை பனிரெண்டாவது வயதில் மாச்சோட்டான் மகன் கோவலன் மணக்கிறான். பருவத்துடன் இருவரிடையே காதல் பிறந்து வளர்கிறது. சாந்தி முகூர்த்த நாளும் நிச்சயிக்கப்படுகிறது.

விதி வீசிய மாலை :

சாந்தி முகூர்த்தத் தினக் கொண்டாட்டங்களில் நாட்டியக் கச்சேரிக்கு ஏற்பாடு செய்கிறார்கள். சோழ நாட்டிலேயே பிரசித்திபெற்ற மாதவி என்ற தாசி நாட்டியமாட வருகிறாள். மாதவி பிறக்கும்போதே அவளுடன் பிறந்த மாலையொன்றிருக்கிறது அவள் எந்த சபையில் நடனமாடினாலும், முடிவில் அந்த மாலையை வீசுவாள். அது யார கழுத்

தில் விழுகிறதோ அவன்தான் தன் கணவனாவான் என்று அவள் சபதம் செய்திருக்கிறாள். சாந்தி முகூர்த்த சபையில் நடனமாடி முடிவில் அவள் வீசிய அந்த மாலை கோவலன் கழுத்திலேயே போய் விழுகிறது. மாதவி பரம சந்தோஷத்துடன் போய் கோவலனிடம் தன்னையும் மனைவியாக ஏற்றுக் கொள்ளும்படி கேட்கிறாள். கோவலன் மறுக்கிறான். மாதவி "நீங்கள் தான் என்பதி..........என்னை ஏற்றுக்கொண்டே யாக வேண்டும்" என்று வாதாடுகிறாள். வழக்கு சோழ மன்னனிடம் போகிறது. மாதவியின் மாலையைப்பற்றிய விவரமெல்லாம் முன்பே யறிந்த மன்னன், கோவலன் மாதவியுடன் போகவேண்டியதுதான் என்று தீர்ப்பளிக்கிறான்.

காலச் சக்கரம் சுழலுகிறது :

கோவலன் வேண்டா வெறுப்பாக மாதவியுடன் போகிறான். ஆனால் அவள் வீட்டில் அவள் பிரேமை வலையில் சிககுகிறான். மாதவி அந்தரங்கபூர்வமாக அவனிடம் பிரேமை கொண்டிருக்கிறாள்.

அங்கே குடும்பத்தில் ஒன்றன்பின் ஒன்றாகத் துன்பங்கள் வந்து குவிகின்றன. கோவலன் மாதவிக்காக குடும்பச் செல்வத்தை வாரிவழைத்து வாரிவழைத்து வாரியிறைக்கிறான். கோவலன் கேட்டனுப்பும் போதெல்லாம் செல்வத்தை அள்ளியனுப்புகிறாள் கண்ணகி, கடைசியில் தான் அணிந்திருந்த நகைகளையும் புடவைகளையும் கூடக் கொடுத்தனுப்புகிறாள். குடும்பம் வறுமையில் மூழ்குகிறது.

காவிரிப்பூம் பட்டினத்தில் இந்திர விழாக் கொண்டாட்டம் நடக்கிறது. கோவலன் உற்சாகத்தோடு பெண்மையைப் புகழ்ந்து பாடுகிறான். அவன் வேறு யாரோ பெண்மேல் ஆசை கொண்டதாகத் தப்பர்த்தம் செய்து கொண்டு மாதவி தானும் ஒரு கற்பனைப் புருஷனைப்பற்றிப் பாடுகிறாள். அவள் தனக்கு துரோகம் செய்துவிட்டதாகக் கோவலன் எண்ணி விடுகிறான். கோபத்தில் அவளைக் கண்டபடி, ஏசிவிட்டு, அவள் வீட்டைவிட்டே வெளியேறுகிறான்.

மதுரைப் பிரயாணம்:

கோவலன் வீடு திரும்புகிறான். தரித்திரக் கோலத்தில் கண்ணீரும் கம்பலையுமாக நின்ற கண்ணகி அவனை ஆவலுடன் வரவேற்கிறாள். கோவலன் அந்தக் கோலத்தில தன் குலத்தவரிடையே வாழ விரும்பவில்லை ஆதலால் இருவரும் இரவோடிரவாக மதுரைக்குப் புறப்படுகிறார்கள். அங்கேபோய் ஏதாவது வியாபாரம்செய்து பிழைக்க எண்ணுகிறார்கள். கௌந்திபடிகள் என்ற பௌத்த சன்யாசினியின் வழித்துணையும் அவர்களுக்குக் கிடைக்கிறது.

சிலம்பின் லீலை:

பாண்டிய மகிஷியின் சிலம்புகளில் ஒன்று பழுதடைகிறது. அதைச் சரிப்படுத்துவதற்காக வஞ்சிப்பத்தன் என்ற பொற்கொல்லனிடம் கொடுக்கிறார்கள். வஞ்சிப்பத்தன் மகள் பார்வதி என்பவள் பைத்தியத்தை தெளிய வைக்க வந்த இஞ்சிப்பத்தன் சிலம்பைத் தட்டிக்கொண்டு போய்விடுகிறான். பாண்டியன் பத்து நாட்களுக்குள் சிலம்பைக் கொண்டுவந்து சேர்க்காவிட்டால், அவனைச் சிரச்சேதம் செய்து விடுவதாக வஞ்சிப்பத்தனை மிரட்டுகிறான்.

கௌந்தியடிகள் கோவலனையும் கண்ணகியையும் மதுரையை யடுத்த ஒரு இடைச்சேரிக்கு அழைத்துச் சென்று, அங்கே மாதரி என்ற இடைச்சியிடம அவர்களை சேர்த்துவிட்டுத் தன் வழி போகிறாள் கோவலன் கண்ணகியின் கால் சிலம்பு ஒன்றை வாங்கிக்கொண்டு, அதை விற்று வர்த்தகத்திற்கு முதல் தேடும் பொருட்டு மதுரை நகருக்குள் போகிறான். அங்கே வஞ்சிப்பத்தனைச் சந்தித்து அவனிடம் சிலம்பைக் காட்டி அதை விற்றுத் தரும்படி கேடகிறான்.

அரசன் கோபத்திலிருந்து தன் தலையைக் காப்பாற்றிக்கொள்ள வழி கிடைத்ததென்று வஞ்சிப்பத்தன் கோவலனைப் பாண்டிய மன்னன் சபைக்கு அழைத்துச் செல்கிறான். அரசனிடம் மகிஷியின் சிலம்பைத் திருடிய கள்வனென்று கோவலனைக் காட்டிக் கொடுத்து விடுகிறான்.

கோவலன் கொண்டுவந்த சிலம்பு காணுமற்போன சிலம்பைப் போலவே யிருக்கிறது. அரசன் கோவலனைக் கள்வனென்று தீர்மானித்து அவனைச் சிரச்சேதம் செய்ய உத்திரவிடுகிறான். கோவலன் தலை தரையில் உருளுகிறது.

கோவலனின் துர்மரணச் செய்தி எட்டுகிறது. கண்ணகி அவன் வெட்டுண்ட இடத்திற்கு ஓடுகிறாள்.

பத்தினியின் பிரதிக்ஞை :

கோவலனின் பிரேதத்தை வைத்துக்கொண்டு கண்ணகி கதறுகிறாள். தன் பதிவிரதா சக்தியால் அதைப் பேச வைக்கிறாள். பழிக்குப் பழி வாங்கப் பிரதிக்ஞை செய்து கொண்டு அங்கிருந்து பாண்டியன் சபைக்குப் புறப்படுகிறாள். சபையில் கோவலன் கொண்டுவந்த சிலம்பு மகிஷியினுடையதல்ல என்பதை நிரூபிக்கிறாள். பதிவிரதையின் கோபாவேசத்தைக் கண்டு நடுங்கிய பாண்டியன் தன அனியாயத் தீர்ப்பை யெண்ணி, மனமுடைந்து உயிரற்றுச் சாய்கிறான். கண்ணகியின் கோபம் ஆறவில்லை. மதுரையைத் தீக்கிரையாகும்படி சபிக்கிறாள்.

சக்தியின் சத்திய தரிசனம் :

மதுரை நகரம் பற்றியெறிகிறது. கண்ணகி வெறிகொண்டவளாக அதைக் கண்டு சிரித்துத் திரிந்து வருகிறாள். கொஞ்சம் கொஞ்சமாக அவள் கோபம் அடங்குகிறது. பச்சாத்தாபம் மேலிடுகிறது. "ஐயோ! என்ன செய்துவிட்டேன்........நகரை யெரிக்க நான் யார்?" என்று வருந்துகிறாள். "நீ தான் சக்தி" என்ற குரல் கேட்கிறது. சிவன் அவள் முன் பிரத்தியட்சமாகி அவளுடைய உண்மையை நினைவூட்டுகிறார். கண்ணகியின் உடலிலிருந்து பார்வதி தேவி சக்தி வடிவமாக வெளியேறி சிவனை வணங்குகிறாள்........கண்ணகியின் உடல் ஒரு சிலையாக மாறுகிறது. உலகம் போற்றும் பத்தினித் தெய்வமாக விளங்கும்படி சிவன் சிலைக்கு வரமளிக்கிறார்.

மங்களம்

கண்ணகி

பாட்டுகள்

1. கவுந்தியடிகள் — ராகம்: பூபாளம்

பூதலம் புகழ் ஜோதி நிலவும்
ஆதவா நீ வா
சீதக் கடலும் துயிலும் நீங்கி
சேவல் கூவின
தீதுரும் அஞ்ஞான மார்க்கத்
திரையும் நீங்கவே
ஓதரும் மெஞ்ஞான மார்க்க
உணர்வும் ஓங்கவே

ராகம்: பிலஹரி

காவின் மரங்கள் காய்த்துத் தழைக்க
பூவின் கொடி புல் பூண்டு செழிக்க
பாவினம் பயிர் பறவை ஒலிக்க
ஆவினம் அம்மா வென்றழைக்க
பூதலம் புகழ் ஜோதி நிலவும்
ஆதவா நீ வா.

2. பால கோவலன் — ராகமாலிகை

விருத்தம்

வளர்கோட்டு இளம் பிறையும்
அமுதகலை துலங்கு வட்டமதியாம்போதென்
மனமதினில் ஆனந்த மகிழ்வுண்டாக்கும்
மாசிலா ஆன் கன்று வயது தந்து பசுவாகி
மடி சுரந்து பால் தரும் நாள்
மாண்பு மிகும் என்னுடலை வலிமையாக்கும்

செழிக்குமிந்தச் செடியரும்பு
தேனாரும் மலராகத் திகழும்போது
தினம் யானும் நுகர மரு மணம் உண்டாக்கும்
தேசுலவும் பருவமதே காசினியில்
இயற்கை இன்பச் சிறப்புமேவ
தேனும் மலர் மதி சாட்சி தெரிவதன்றோ.

3. பெரிய கோவலன் ராகம் : சங்கராபரணம்

பல்லவி

சந்த்ரோதயம் இதிலே காணுவதும்
செந்தாமரை முகமே ஆனந்தம் (சந்)

அனுபல்லவி

சந்தோஷம் தானடைந்தேன் யானுமனச் (சந்)
வானுலவும்
அந்தம்பொலிந்தமுது சிந்தும் கலை நிறைந்த (சந்)

சரணம்

பாந்தம் மிகும் பசுவிலே உயர் (பாந்)
தோன்றுவதன்
சாந்தம் கடவுள் தன்மை சார்ந்தும்
விளங்கும் ருது (பாந்)
தோய்ந்த மரு மலரிலே மது (தோ)
உனது நகை
வாய்ந்த அழகினை ஆராய்ந்
தேன் அது நீயாகும (சந்த்ரோதயம்)

4. கண்ணகி பூஜை ராகம் : மாண்டு

பரமேஸ்வரனே தேவா
தேவா மகேசா பார்வதி பாகா
கருணாசாகரா ஸ்ரீ பார்வதி பாகா
மறையோன் திருமாலும் போற்றும்
மதி சேகரனே காப்பாற்றும்
அரவும் புலியும் காண நாளும்
ஆடிடும் பாதா (பரமேஸ்)

5. கோவலன் ராகம்: மாண்டு

தேவி மனோகரியான ஸ்ரீமதி
திருமாமணி நீயே துணையே
வாழ்வின் நலமே மாநில மீதிலென்
மாதவம் சௌபாக்யம்
யாவும் நீயன்றோ ஜீவசிந்தாமணி
திருமாமணி நீதியே துணையே (தேவி)

6. கோவலன் ராகம்: நவரஸ கன்னட

பல்லவி

அன்பில் விளைந்த அமுதமே
அன்னமே என் கண்ணகி

அனுபல்லவி

கன்னல் தெளிதேன் பாகு சீனி
கனியும் சேர்ந்த கற்கண்டாமுன்மேனி (அன்)

சரணம்

காணும் கலை நீ கலாப மயில் நீ
காதல் உலகம் கடலும் நீயே
மானி நீ என் மாதவம் நீ
மாசில்லாத இல் வாழ்வின் நலம் நீ (அன்)

7. மாதவி ராகம்: காம்போதி

பல்லவி

மாலாகினாள் ஸ்வாமி
மங்கையும் உன் மேலே (மா)

அனுபல்லவி

பூலோக ரம்பை போலே
பூவையின் சொல் தேன் பாலே
சேலார் கண் இடை நூலே
சிறுமி அவள் அன்பாலே (மா)

சரணம்

கந்தமும் கமழ மலர்ந்த
கனகமென் மலராம் இதுவே
சுந்திரா உந்தனைக் கண்டு
சொல்லொணுத நாணங்கொண்டு
சிந்தையும் தேகம் சிவந்த
விந்தையை நீர் காண்கிலீரோ
செந்திரு மலர் காற்றுலே
சிதராமுன் கைக்கொள்வீரே

8. தோழிகள் ராகம்: பைரவி

பல்லவி

அதிரூபமானபெண் உமக்கேற்கவே நடப்பாள்
அழைத்து வரவா சாமீ (அ)

அனுபல்லவி

மதன ரதி இந்த்ராணி மலர் மகள் கலைவாணி
மாதர்கள் கண்டு நாணும் மான் விழியாளையிங்கு (அ)

சரணம் ராகம்: பியாகடை

கன்னமிரண்டும் முகம் பார்க்கும் கண்ணாடி
கனகச் சிலை நிகர்த்த காரிகை ராஜக்ரீடி
அன்ன நடையழகி அவளாம் தகுந்த ஜோடி
ஆரணங்கோடு சுகம் அனுபவிக்கலாம் கூடி (அ)

9. மாதவி ராகம்: கமாஸ்

இவர் தானு; இவர் தானு; இவர் தானு;
என்னைக் கண்ணுளன்
எனதுயிர் பாங்கியரே மன மோகனன் (இ)
புவன மயங்கிடுப எனக்கிவர் சரியோ
பூவையரே இவர் தானென் துரையோ
கவனமின்றி நீர் பேசுதல் முறையோ
கண்களின் குறையோ அறியேன் பூமாரன் (இ)

10. கவுந்தியடிகள் ராகம்: ஹிந்துஸ்தான் பைரவி

ஓதும் காலம் கடந்த வல் விதியை
உணர்ந்தால் யாரும் அறிவார் பதியை
ஆதலினால் மனமே நின் விதியை
ஆராய்வதே மதிதானுமே
வீதி மீறிடார் புவி மீதே.

11. கோவலன் ராகம்: தேசிகச் சிந்து

வந்தனள் ஒரு சுந்தரி—திரு
மங்கைபோலொரு மாது—கொஞ்ச
வயதுதான் நல்ல சாது—வீசு
வாசமேவும் ஜவ்வாது—அன்று
மாலை வீசியுன் மாலையே கொண்ட
மாதவி என்னும் போது
கந்தமார் குழல் வண்டினும்—கொன்றைக்
காயுடனிருல் மேகம்—நுதல்
கலாமதிக் கொருபாகம்—புருவம்
ககனவில்லுடன் ஸ்நேகம்
கானில் வாழ் மட மானையும் முதல்
மீனை மானுதலாகும்,
மாசில்லாள் முகம் தேசுலாவிய
வானகச் சந்த்ர பிம்பம்—படர்
மதன மோகன டம்பம்—கண்டம்
வாரி தோய்ந்த வெண் சங்கம்—திகழ்
மார்பிடந்தனில வார்பெனும தனம்
சீர் பெரும் செம்பொற்கும்பம்.

12. கவுந்தியடிகள் ராகம்: மிஸ்ர சாரங்

விதியதாம் மாறுததாம் மகளே
வீணே இவ்வேதனை யேன் மகளே
மனைமதி காணுவிதி அதுவே
மாயா சொரூபமதே மயம் சேர்
சதா சிவன் தனையே
தாழ்த்தும் விதியே
அதாம் தர்மமே

நாளிது இல்லையேல் நாளையே பணிவரே
அங்கும் வென்றதும் விதி ஆகுமே
உன்னை நீயே நினையாததும் விதியாம்
உலகமெல்லாம் விதியால் நிகழும்
உணராமல் வேதனையேன்

13. கோவலன் ராகம்: பஹாடி

தேவ மகள் இவள் யார்—இவள் யாரோ (தேவ)

தேனின் மொழியாள் தென்றலின் ஒயிலாள் (தேவ)

பூவிலயன் மால் புரமெரித்தோனும்
யாவரும் மயங்கும் மோஹினிதானோ (தேவ)

லோக மோகஹன யோகினி போலே
ஜாடை காட்டும அன்னப்பேடையன்போடு
கூடிக்குலாவும் நந்நாளும் எந்நாளோ (தேவ)

14. மாதவி ராகம்: செஞ்சுருட்டி

மலர் மாரனோ தேவ மாயனோ சுர
வனிதா மணி மாதர் புகழ்
சுரேசனோ யாவனோ சொல் (மல)

இன்ப—கலமே குலாவுமுந்தன் பார்வையால்
காதல்—அலை மோதும் நீரில் மூழ்கலாகினேன்
காணுவாய் நீ (மல)

தென்றலுந் தீயாய் மிகவீசுவதாலே
தேனும் பாலுமே வீணென வெறுத்தேன்
ஜெகமே இது பொழுதே எனைச் சேர்ந்தா
லுயிர் வாழ்வேன் நீ (மல)

மோகனவானுன் மேல் வாலிபத்தாலே
மோகமுமானேன் மோடி செய்யாமல்
மகிழ்ந்தென்னையே மகிபா வந்தணைவாயே நீ (மல)

15. கோவலன் ராகம்: மிஸ்ர சாமா

மானமெல்லாம் போனபின்னே
வாழ்வது தானொருவாழ்வா
வணிகர் குல மர பினர்க்கோர்
வசை தர ஏன் பிறந்தேனோ
குஞ்சர மீதும் பஞ்சணைமேலும்
குலவிய காலம் ஓர் காலம்
நஞ்சனையாளின் வஞ்சனையாலே
நடைப் பிணமானதோர் காலம்
கரையடுத்த நீரிருக்க
கானலை நாடிடும் மானினம்போல்
கனி கொடுத்தாள் தனை விடுத்தே
கணிகை யின்பால் அலைந்தேனே
கற்பகமேவும் கனியருந்தாமல்
காஞ்சிரங்காயை யுண்டேனே
காமுகன் யான் கண்ணகியாள்
மாமுகம் காணவுமாமோ
தப்பிதம் யாவும் நானே புரிந்தும்
தாசியை நோவதும் வீணே.

16. கண்ணகி ராகம்: யமன் கல்யாண்

ஆரண்யலாவண்யமே அருமையே
அவனி மேல் ஆனந்தம் ஆனந்தம் (ஆர)
ஆசை நாதனும் அன்புடனே
அருகினில் மேவுமிந்நாளினிலே
ஆரண்யம் மாளிகை ஆகவும் தோணுதே (ஆர)
குளிர் ஓடையின் பாலொரு மேடையின் மேல்
மயில் ஆடுவதும் குயில் பாடுவதும்
மருவுலாவும் மலரின் மாக்ஷி
வளர்ந்த மரங்கள் கண் காக்ஷியெல்லாம்
மாசில்லாத ஈசனின் அருளால்
வாழ்த்திடும் நலங்காண மனச் சோர்வு
மறந்தேனே (ஆர)

17. கோவலன் ராகம் : சகாணு

பல்லவி

பத்தினியே உன் போல்
இத்தரை மீதினில்
உற்றவர் யார் புகலவாய் தர்ம (பத்)

அனுபல்லவி

சத்தியமாகவே தாய்க்குப் பின் தாரம்
தாரத்தினாலல்லவோ சம்சாரம் (பத்)

சரணம்

பந்து ஜெனமெல்லாம் வீண் பரிவாரம்
பாரினில் அவரால் யேதுபகாரம்
அந்தரந்தனிலும் உதவுவாள் தாரம்
ஆபத்து வேளையில் ஆகும் ஆதாரம் (பத்)

18. கவுந்தியடிகள் ராகம் : பிஹாக்

மாநில மீது ஜீவர்கள் வாழும்
வாழ்வொரு நாடகமாகும்
நீயதிலாடிப் போனது போக
நிகழ்வது தானொரு பாதி

19. கோவலன் ராகம் : செஞ்சுருட்டி

நண்டு சிப்பி வேய் கதலி நாசமுறுங்கால் தான்
கொண்ட கருவேயழிக்கும கொள்கையதுபோல்
பண்டு தனம் கல்வி மதி பாழுடையும் நாள் மனம்
பாவையர்மேல் நாடுமென்றே படித்துணர்ந்தும் நான்
மணந்தவளை தான் மறந்து
மாதவி சதமென நினைந்தேனே.

ராகம் : புன்னாகவராளி

ஆலவாய் மதுராபுரி
மீனாட்சி சுந்தரா அபயம் அபயம் (ஆலவாய்)
சிலமேவும் உன் தெரிசனமே
சேவிப்பார்க்குண்டோ விசனமே (ஆலவாய்)

20. கண்ணகி ராகம் : ஹிந்துஸ்தான் பைரவி

தயாபரி சகாயம் நீ செய்யாவிடில்
எவ்வா றுய்வேன்
சதிபதியாயெமைச் சேர்த்தாய்
எனைத்—தனியாளாக்கியும் சேர்த்தாய்
பின்பும் பிரித்தாய் பேதையென்னை
இதுவுமுன் திருவுள்ளமோ பாரில் (சதி)
தாயே இருந்தும் சேயும் ஏங்கி
தவித்திடும நிலைபோல் ஆனேனே
தாரணி மீதென் ஆருயிர் நாதன்
சங்கடந் தீர்ந்திட தயை புரிவாயே
சதி பதியாய் எமைச் சேர்ப்பாய்.

காமிக்

21. ருக்மணி :

கண்ணா.........கமலக்கண்ணா
மணிவண்ணா என்னைக் கல்யாணம் செய்குவாயே (க)

கிருஷ்ணன் :

கலங்காதே மானே கனியே செந்தேனே
காதலாலே வாடிநொந்தேன் ஆதலாலே ஓடிவந்தேன்

ருக்மணி :

கமலபாதம் தஞ்சம் தஞ்சம்
கண்ணா கருணை செய்வாய்

கிருஷ்ணன் :

கண்மணி அஞ்சாதே கலங்காதே
நலங்காதே விண்ணோர்கள் வந்தாலும்
மண்ணூரச் செய்குவேன்
விட்டுவிடாமலே கொண்டுமே சென்றிடுவேன்

ருகமணி :

ஆஹா கண்டேன் நான் கண்டேன்
கலியாண மாப்பிள்ளையை.

22. ருக்மணி :

கண்ணனெந்தன் காதலன்தானே நீயல்ல (கண்)
மண்ணைத்தின்று உலகைக் காட்டினாய்—அன்று
என்னை வைத்துத் தேரை யோட்டினாய்
கமலக் கண்ணனெந்தன் காதலன்தானே

கிருஷ்ணன் :

மண்ணைத் தின்று மகிழச் செய்தவன் நானே தான்
மங்கைபுனகஸிந்த சந்தேகம் ஏனோதான்
மந்தகாசவதன் சுந்தரி மானே வா (ம)

ருக்மணி :

ஸ்யாம சுந்தரனே மதனமோகனா
செய்பிழை பொருத். தருள்வாய்

ருக்மணி :

ஓடி விளையாட வாருமே கோபாலா
தேடித் தேடித் தெருவில் நின்றேனே—என்னை
தேற்றுவிக்க வந்த பூமானே—கண்ணா
ஓடி விளையாட வாருமே.

கிருஷ்ணன் :

மணமுள்ள பாரிஜாதமே ஆச்சர்யம்
மங்கையுந்தன் கூந்தல்தனிலே வச்சுக்கோ
மாதவத்தால் வந்த பெண்மணி ருக்மணி

இருவரும் :

ஆடிப் பாடியே அன்புகொண்டுமே
அகமகிழ்ந்தே வாழ்வோம்.

Printed at the Rangam Bros., Mount Road, Madras—1944.

தி ஸௌத் இந்தியா

பிக்சர்ஸ்

—: விநியோகிக்கும் படங்கள் :—

1.	கண்ணகி	உயரிய தமிழ்ப் படம்
2.	சபாபதி	உயரிய முழு காமிக் படம்
3.	ஆனந்தன்	புராணப் படம்
4.	காலேஜ் குமாரி	அரிய சமூகத் தமிழ்ப்படம்
5.	பத்னி	தெலுங்குப் படம்
6.	இராஜசூயம்	உன்னத புராணப் படம்
7.	அனந்த சயனம்	,,
8.	பிரஹ்லாதா (மலையாளம்)	,,

மற்ற வெளியீடுகள்

1. காமதேனு
2. பாலயோகினி
3. அம்மாஞ்சி
4. மாலபில்லா (தெலுங்கு)
5. வசந்தசேனு

—: வெள்ளித் திரையில் விரைவில் எதிர்பாருங்கள் :—

P. U. சின்னப்பா

பாபநாசம் சிவன் — T. R. ராஜகுமாரி

N. S. கிருஷ்ணன் — T. A. மதுரம்

—: நடிக்கும் :—

குபேர குசேலா

தேவகன்யா (தமிழ்) ★ பாக்ய லக்ஷ்மி (தெலுங்கு)

வருகிறது
P.U.சின்னப்பா
T.R.ராஜகுமாரி
பாபநாசம் சிவன்
P.S.கோவிந்தன்
N.S.கிருஷ்ணன்
T.A.மதுரம்
L.நாராயண-ராவ்
முதலியோர் நடிக்கும்
குபேர குசேலா
டைரக்ஷன் R.S.மணி B.S.ராமையா
கதை,வசனம் B.S.ராமையா
தயாராகின்றன
மஹாமாயா
பர்த்ருஹரி
இளங்கோவன்
தி ஸௌத் இந்தியா பிக்சர்ஸ் ரிலீஸ்
S.I.P
Release